அடையாள இலக்கம்:

அகில அவுஸ்திரேலியா, நியூசிலாந்து
தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் - 2009

அவுஸ்திரேலியா பட்டதாரிகள் தமிழர் சங்கம்
Tamil Competition – Australian Society of Graduate Tamils

# விசேட எழுத்தறிவுப் போட்டி

**இளைஞர் பிரிவு**
(18-30 வயதுப் பிரிவு)

காலம்: மு.ப. 9.30 மணி, ஞாயிற்றுக்கிழமை

நேரம் : 2.00 மணி

அ) பின்வரும் கேள்விகளுக்குச் சரியான விடைகளைத் தெரிந்தெடுத்து அதற்குரிய இலக்கத்தை விடப்பட்ட இடத்தில் எழுதவும். புள்ளிகள்: 40 x 1.0 = 40

<u>சொல்லும் தொடரும்</u>

1. புத்தெழில் என்ற சொல்லைப் பிரித்து எழுதினால்
   1. புதுமை + எழில் 2. புத்து + எழில்
   3. புத் + தெழில் 4. புது + எழில் (..........)

2. காகம் கரையும் என்பது போலச் சிங்கம்
   1. கர்ச்சிக்கும் 2. உறுமும்
   3. கத்தும் 4. கீச்சிடும் (..........)

3 அருக்கன் என்ற சொல்லின் பொருளாக அமையக் கூடியது
   1. சனீசுவரன் 3. சூரியன்
   3. சுந்திரன் 4. வெள்ளி (..........)

4 தாமரை என்ற சொல்லின் ஒத்த சொல்
   1. அல்லி 2. முல்லை
   3. பங்கயம் 4. கற்பகம் (..........)

5 கண்டம் என்ற சொல்லின் எதிர்மறைப் பொருள்
   1. சிகண்டம் 2. சகதண்டம்
   3. அகண்டம் 4. பிண்டம் (..........)

6 தபுதாரன் என்ற சொல்லிற்கு ஒத்த கருத்தைத் தரும் சொற்பதத்தைத் தெரிவு செய்க–
   1. மனைவியை நேசிப்பவன் 2. மனைவிக்குத் துரோகம் செய்பவன்
   3. மனைவியை இழந்தவன் 4. மனைவியை இம்சிப்பவன்
   (..........)

7 முகில் என்ற சொல்லுக்கு ஒத்த சொல்லாக அமையாத சொல்
   1. மேகம் 2. புகார்
   3. கொன்றை 4. கொண்டல் (..........)

8 அடாது செய்வார்
   1. தொடாது விடுவார் 2. அட்டது செய்யார்
   3. படாது படுவார் 4. அவலம் அடையார் (..........)

9 மூத்தோர் சொன்ன......
   1. வார்த்தை அமிர்தம் 2. மொழி கேளாதே
   3. கதைகள் பல 4. முழுவதும் சரி (..........)

10 தொடர் உந்து வண்டி ........ ஓடியது
   1. சல சல என 2. கட கட என
   3. முணு முணு என 4. பஞ்சும் நெருப்பும் போல
   (..........)

11. யாழ்ப்பாணத்தின் கடைசித் தமிழ் மன்னன் யார்?
   1. இராஜேந்திரன் 2. சங்கிலியன்

3. இரும்பொறை 4. காக்கை வன்னியன் (..........)

12. வன்னியை ஆண்ட தமிழ் மன்னர்களில் ஒருவன்
1. பண்டார வன்னியன் 2. காக்கை வன்னியன்
3. சங்கிலியன் 4. இராஜ சிங்கன் (..........)

13. பல்லவ மன்னர்களின் கொடியில் இருந்தது
1. புலி 2. நந்தி
3. யானை 4. வராகம்(பன்றி) (..........)

14. யாழ்ப்பாணத்தில் இன்றுமுள்ள ஒரு நீரேரியை வெட்டுவித்த சோழ படைத்தலைவன்
1. இராஜ ராஜன் 2. சுந்தர சோழன்
3. கருணாகரத் தொண்டைமான் 4. அநபாய சோழன் (..........)

15. யாழ்ப்பாண அரசின் கடைசித் தலை நகரம்
1. கந்தரோடை 2. கோப்பாய்
2. வல்லிபுரம் 4. நல்லூர் (..........)

16. காவிரி நதிக்குக் கல்லணை கட்டிய சோழ மன்னன்
1. இரும்பொறை 2. செங்கணான்
3. குலோத்துங்கன் 4. கரிகால் வளவன் (..........)

17. கலிங்கம் வென்ற குலோத்துங்க சோழனின் இன்னுமொரு பெயர்
1. அநபாயன் 2. கங்கை கொண்ட சோழன்
3. ஆதித்த கரிகாலன் 4. அருள்மொழி வர்மன் (..........)

18. யாழ்ப்பாண அரசை அடிமைப்படுத்திய சிங்கள மன்னன்
1. முதலாம் பராக்கிரம பாகு 2. முதலாம் விஜய பாகு
2. ஆறாம் பராக்கிரம பாகு 4. இராஜ சிங்கன் (..........)

19. பாண்டிய மன்னர்களின் கொடி
1. புலி கொடி 2. நந்திக் கொடி
2. மீன் கொடி 4. வீணைக் கொடி (..........)

20. சோழ மன்னர்கள் வென்ற தூரதேச நாடு அல்லாதது
1. இஸ்ரீ விஜயம் (சுமாத்திரா) 2. கடாரம் (மலேசியா)
2. மடகாஸ்கர் 4. கம்போடியா (..........)

21. திருக்குறளில் உள்ள அதிகாரங்கள்
1. 1330 2. 133
3. 100 4. 33 (..........)

22. கலிங்கத்துப் பரணி இயற்றியவர்
1. ஒட்டக் கூத்தர் 2. ஜெயம் கொண்டார்
3. கம்பர் 4. பாரதி (..........)

23. பொற்சிறையில் வாடும் புனிதர்கள் என்ற நாவலை எழுதியவர்
1. முருக பூபதி 2. தெளிவத்தை ஜோசெப்
3. செங்கை ஆழியான் 4. தெணியான (..........)

24. வசன கவிதையை முதலில் இயற்றியவர்

1. மு. மேத்தா 2. பாரதி
3. வைரமுத்து 4. வாலி (..........)

25. இன்று போய்ப் போர்க்கு நாளை வா என நல்கினான் – இந்த வரியைக் கொண்ட பாடல் வருகின்ற இலக்கியம்

1. சிலப்பதிகாரம் 2. மணிமேகலை
3. குயிற்பாட்டு 4. கம்பராமாயணம் (..........)

26. எல்லார்க்கும் நன்றாம் பணிதல்– இந்த வரியைக்கொண்ட பாடல் வருகின்ற இலக்கியம்

1. குயிற்பாட்டு 2. திருக்குறள்
2. மணிமேகலை 4. கம்பராமாயணம் (..........)

27. வசனநடை கைவந்த வல்லாளர் – என்று சொல்லப்படுபவர்

1. இராமலிங்க வள்ளலார் 2. ஆறுமுக நாவலர்
3. பேராசிரியர் கைலாசபதி 4. கோகிலா மகேந்திரன்
(..........)

28. கீழே தரப்பட்ட எழுத்தாளர்களில் ஆஸ்திரேலியா நாட்டில் வசிக்காதவர்

1. எஸ் பொன்னுத்துரை 2. லெ. முருகபூபதி
3. பொ. கனகசபாபதி 4. அருண் விஜயராணி
(..........)

29. சிறுநண்டு மணல்மீது படம் ஒன்று கீறும் – என்று தொடங்கும் கவிதையை எழுதியவர்

1. மகாகவி பாரதி 2. மகாகவி உருத்திரமூர்த்தி
3. உ.சேரன் 4. சோ. பத்மநாதன்
(..........)

30. அண்மையிற் காலமான மூத்த தமிழ்க் கவிஞர்

1. மகாகவி உருத்திரமூர்த்தி 2. அ.முருகையன்
3. கவிஞர் கண்ணதாசன் 4. கலிங்கன் பாவரசன்
(..........)

31. இந்திய கிரிக்கெட் அணியில் விளையாடிய தமிழர்

1. கிருஸ்ணமாச்சாரி இஸ்ரீகாந்த் 2. கபில் தேவ்
3. சுனில் கவாஸ்கர் 4. மு. முரளிதரன் (..........)

32. பின் வருவோரில் தமிழ் விஞ்ஞானி அல்லாதவர்

1. சீ.வி இராமன் 2. அப்துல் கலாம்
3. ஈ.வே.இராமசாமி 4. வீ. எஸ் சந்திரசேகரர்
(..........)

33. மூத்தோர் சம்மதமின்றி தலைவி தலைவனுடன் சென்று வாழ்வை அமைத்தல் தமிழ் மரபில் எவ்வாறு அழைக்கப்படும்

1. பெண்வழிச் சேரல் 2. உடன்போக்கு
3. சுயம்வரம் 4. கூடக்கு இருத்தல்
(..........)

34. திரைப்படப் பாடகி சித்ரா பிறந்த இந்திய மாநிலம்

1. தமிழ் நாடு 2. கேரளா
3. ஆந்திரப் பிரதேசம் 4. இடெல்கி (..........)

35. அகாடமி விருது பெற்ற தமிழ் இசை அமைப்பாளர்

1. இளைய ராஜா		2. இரஹ்மான்
3. வாலி		4. தேவா		(……….)

36. M I A என்று அழைக்கப்படும் தமிழ்ப் பாடகியின் முழுப் பெயர்
1. மைதிலி இந்திரன் அண்ணாமலை		2)மாயா அருள்பிரகாசம்
3. மஞ்சுளா அன்புமணி		4. மேரி இந்திரா அன்புமணி
(……….)

37. பின்வருவோரிற் சிறந்த தமிழ்ப் பாடகர் அல்லாதவர்
1. எஸ். பீ.பாலசுப்பிரமணியம்		2. வாணி ஜெயராம்
3. கர்ணம் மல்லேஸ்வரி		4. ஓதுவார் சுவாமிநாதன்
(……….)

38. சிங்கப்பூர் நாட்டின் தமிழ் ஜனாதிபதியாக விளங்கியவர்
1. அப்துல் கலாம்		2. எஸ். ஆர்.நாதன்
3. ஜெ.ஆர். ஜெயவர்த்தன்		4. இடத்தோ சாமி வேலு
(……….)

39. இந்தியாவில் தயாரிக்கப்பெற்ற அணுக்குண்டின் தந்தை என்று போற்றப்படும் தமிழ் விஞ்ஞானி
1. அப்துல் கலாம்		2. சந்திர சேகர்
3. வெங்கட் ராமன்		4. வெங்கட் ராகவன் (……….)

40. தமிழ் மொழிக்குச் சேவை செய்த ஐரோப்பிய பெரியார்
1. மறைமலை அடிகள்		2. வீரமாமுனிவர்
3. இளங்கோ அடிகள்		4. விபுலானந்த அடிகள்
(……….)

**ஆ) பின்வரும் கேள்விகளுக்குச் சரியான விடைகளைக் கோடிட்ட இடத்தில் எழுதவும்.**

புள்ளிகள்: 15 x 2 = 30

1. யாழ் நூலை இயற்றியவர் யார்?……………………………………

2. ஆங்கிலத்தில் GENERAL என்ற வார்த்தைக்குச் சோழர்களால் உபயோகிக்கப்பட்ட பொருத்தமான தமிழ்ப் பதம் என்ன?

……………………………………

3. தமிழ் நாட்டின் இன்றைய முதல் அமைச்சர் யார்? ……………………….

4. தமிழ் அறிஞரின் ஒருவரின் பெயரால் ஒரு வானியல் தொலைநோக்கி பெயரிடப்பட்டது, அந்த தொலைநோக்கி பெயர் என்ன?

……………………………………

5. இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் உள்ள நீரிணை எது?

……………………………………

6. அகில உலகத் தமிழ் ஆராய்ச்சி அமைப்பிற்கு சூத்திரதாரியான ஈழத்தமிழர் யார்?

…………………………………..

7. யாழ் பல்கலைக் கழகத்தின் இப்போதைய துணைவேந்தர் யார்?

……………………………………

8. சிட்னியில் முதலில் தொடங்கப்பட்ட தமிழ்ப் பாடசாலை எது?

………………………………………

9. கல்கி ஆசிரியர் திரு.ரா.கிருஷ்ணமூர்த்தியின் புனைபெயர்களில் ஒன்றைத் தருக?

………………………………….

10. crisis என்ற ஆங்கிலச் சொல்லுக்கு ஒத்த தமிழ்ச் சொல் தருக?

……………………………………..

11. அகில உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு ஈழத்திலே எவ்வாண்டு நடந்தது? ……………………..

12. தமிழரைப் போல் சீதனம் (வரதட்ஷணை) கொடுக்கும் வழக்கம் உடைய இனத்தவர்? ………………….

13. தமிழ் மொழியைச் செம்மொழியாக்கப் பாடுபட்ட அமெரிக்கப் பேராசிரியர்? ………………………………….

14. Concentration camp என்ற ஆங்கிலச் சொற்றொடருக்கு ஒத்த தமிழ்ச் சொற்றொடர் தருக? ……………………………….

15. இலங்கையில் எதிர்கட்சித் தலைவராக இருந்த ஒரேயொரு தமிழர் பெயர் என்ன? ……………………………………

| புள்ளிகள் | |
|---|---|

**இ) கீழே தரப்பட்ட தலைப்புக்களில் ஒன்றைப் பற்றி 250 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக. கொடுக்கப்பட்ட எழுதுதாளை இதற்கு உபயோகிக்கவும்.**

புள்ளிகள் = 30

1. ஈழப்போரின் பின் குழப்பத்தில் இருக்கும் புலம்பெயர்ந்த தமிழ் மக்களின் தலைவராக தெரிவாகும் நீங்கள் புலம்பெயர்ந்த தமிழ் மக்களுக்கு எப்படியானதொரு தலைமைத்துவத்தை வழங்குவீர்கள் என்றும் தடுப்பு முகாம்களில் அல்லல் படும் எமது தமிழர்களுக்கு எவ்வாறு உதவுவீர்கள் என்றும் ஒரு கட்டுரை எழுதுக.

2. தொலைதொடர்பு சாதனங்களின் வளர்ச்சி மனித கட்டுப்பாட்டை மீறிவட்டது. தொலைக்காட்சியும் திரைப்படங்களும் இன்றைய சமுதாயத்தை பெரிதளவில் மாற்றும் பெரும் சக்தியுடையவை. சமுதாயத்தில் முதலில் எதைத் திருத்தவேண்டுமோ அதை நாம் தொலைத் தொடர்பு சாதனங்களின் வழி திருத்தவேண்டும். இதை நோக்கில் கொண்டு தமிழ்த் தொலைக்காட்சி நிலையத்தின் புதிய இயக்குநராக பதவியேற்கும் நீங்கள் ஒரு சமூகத்தின் பல்வேறு தேவைகளை நிறைவு செய்யும் வகையில் எவ்வாறு சிறப்புடன் கொண்டு நடத்துவீர்கள்? இதைப்பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

3. உங்கள் வயதிலிருக்கும் நெருங்கிய சிநேகிதன் அல்லது சிநேகிதி குடும்பத்தைவிட்டு தனியாக சென்று சுதந்திர வாழ்க்கை வாழவேண்டும் என எண்ணுகிறார். குடும்ப ஆதரவு அல்லது சுதந்திரவாழ்வு? நாம் எதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்? உங்கள் சிந்தனைகள் பற்றி உங்கள் நண்பருக்குக் கடிதம் எழுதுக.

| புள்ளிகள் | |
|---|---|

| மொத்தப் புள்ளிகள் | |
|---|---|